(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 3(8).]

# பாராளுமன்றம்

## 3 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2021 மார்ச் 26 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2021 ஏப்ரல் 05, திங்கட்கிழமை

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழகம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

வேலையாளர்களின் தேசிய குறைந்தபட்ச வேதனம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

# 2021 ஏப்ரல் 06, செவ்வாய்க்கிழமை

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14(1) ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி அறவீடு தொடர்பில் வர்த்தக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2021 சனவரி 12 ஆம் திகதிய 2210/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.03.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நீதி அமைச்சர்,— குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 2013 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7(2) ஆம் பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2020 திசெம்பர் 23 ஆம் திகதிய 2207/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.03.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2021, ஏப்ரல் 08, வியாழக்கிழமை)**

73/2020

கௌரவ ஹேஷா விதானகே,— பெருந்தோட்ட அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் சிறு ஏற்றுமதி பயிர்கள் ஒவ்வொன்றும் பயிரிடப்பட்டுள்ள காணிகளின் பரப்பு மற்றும் அத்தகைய சிறு ஏற்றுமதி பயிர்களை பயிரிடுகின்ற விவசாயிகளின் எண்ணிக்கை என்பன தனித்தனியாக யாவை என்பதையும்;

(ii) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை சிறு ஏற்றுமதி பயிர் உற்பத்தியின் அளவு ஒவ்வொரு பயிர் மற்றும் ஆண்டு வாரியாக தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(iii) சிறு ஏற்றுமதி பயிர்ச்செய்கையாளர்களுக்கென அரசாங்கத்தால் வழங்கப்படும் மானியங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் இன்றளவில் சிறு ஏற்றுமதி பயிர்ச்செய்கை வீழ்ச்சியடைந்துள்ளது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனின், அதற்கான ஏதுக்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2021, ஏப்ரல் 20, செவ்வாய்க்கிழமை)**

1388/2021

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சரும் நிதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மதுவரிக் கட்டளைச் சட்டத்திற்கு அமைவாக தென்னங் கள்ளு என அறியப்படுவது யாதென்பதையும்;

(ii) தென்னங்கள்ளு தொடர்பாக ஏதேனும் தரநிர்ணயம் உள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்தரநிர்ணயம் யாதென்பதையும்;

(iv) கள்ளு (*மஹ ரா*) என அறியப்படுவது யாதென்பதையும் ;

(v) கள்ளுக்கான தரநிர்ணயம் யாதென்பதையும்;

(vi) கள்ளு மற்றும் கள்ளு (*மஹ ரா*) என்பவற்றின் தரத்தினை இனங்காணும் முறையியல் யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பதனீர் மற்றும் கள்ளு என்பவற்றின் தரத்தினை உறுதிப்படுத்தும் பொறுப்பு எந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருக்கின்றது என்பதையும்;

(ii) பதனீர் மற்றும் கள்ளு என்பவற்றின் தரமானது எந்த முறையியலின் அடிப்படையில் உறுதிப்படுத்தப்படுகின்றது என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1390/2021

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சரும், நிதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மதுசாரம் மற்றும் வினாகிரி தயாரிப்பின் போது கையடக்கத் தொலைபேசி பட்டரிகள், யூரியா, முள்ளுக்கம்பி மற்றும் அமோனியா போன்றவை பயன்படுத்தப்படுவது அல்லது கலக்கப்படுவது தொடர்பில் அறியக்கிடைத்துள்ளதா என்பதையும்;

(ii) 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் மேற்கூறப்பட்டுள்ளவாறு பதிவாகியுள்ள தகவல்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களைப் பயன்படுத்துவதன் மூலம் அல்லது கலப்பதன் மூலம் தயாரிக்கப்படும் கள்ளின் காரணமாக அரசாங்கத்திற்குக் கிடைக்க வேண்டிய வரி வருமானம் இழக்கப்படுகின்றதா என்பதையும்;

(iv) ஆமெனில், வரி வருமானம் இழக்கப்படும் விதம் யாதென்பதையும்;

(v) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களைப் பயன்படுத்துவதன் மூலம் அல்லது கலப்பதன் மூலம் தயாரிக்கப்படும் கள்ளை அடையாளம் காண்பதற்கான வழிமுறை ஏதும் உள்ளதாவென்பதையும்;

(vi) ஆமெனில், அவ்வழிமுறை யாதென்பதையும்;

(vii) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களைப் பயன்படுத்துவதன் மூலம் அல்லது கலப்பதன் மூலம் தயாரிக்கப்படும் கள்ளு என்ன பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது என்பதையும்;

(viii) வெளி மூலப்பொருட்களை கள்ளுடன் கலப்பதற்கான நோக்கம் யாதென்பதையும்;

(ix) வெளி மூலப்பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படுகின்ற கள்ளு எதற்காகப் பயன்படுத்தப்படுகின்றது என்பதையும்;

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வினாகிரி மற்றும் மதுசாரம் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் கள்ளின் தரம் எவ்வாறு அளவீடு செய்யப்படுகின்றது என்பதையும்;

(ii) அவ்வாறு தரத்தினை அளவீடு செய்யும் சந்தர்ப்பங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1391/2021

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சரும் நிதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் —

(i) கள்ளு சேகரிப்பதற்கான அனுமதிப்பத்திரம் கொண்டுள்ளோரால் சேகரிக்கப்பட்ட மொத்தக் கள்ளின் அளவு;

(ii) அனுமதிப்பத்திரம் கொண்டுள்ள ஒவ்வொரு நபரால் சேகரிக்கப்பட்ட கள்ளின் அளவு;

(iii) அனுமதிப்பத்திரம் கொண்டுள்ள ஒவ்வொரு நபரால் சேகரிக்கப்பட்ட கள்ளு வழங்கப்பட்டுள்ள தரப்பு;

(iv) வழங்கப்பட்டுள்ள அளவு;

என்பன வெவ்வேறாக யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) கள்ளு சேகரிப்பாளர்களால் சேகரிக்கப்பட்ட கள்ளினை அவர்களது உடைமையில் வைத்திருக்கக்கூடிய காலப்பகுதி சட்டரீதியாகவும் தொழில்நுட்ப ரீதியாகவும் வெவ்வேறாக யாதென்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) கள்ளுச் சீவுதல் தொடர்பான அனுமதிப்பத்திர முறையை இல்லாதொழிப்பதன் மூலம் கள்ளு ஒழுங்குபடுத்தும் செயன்முறைக்கு பாதிப்பு ஏற்படுகின்றதா;

(ii) ஆமெனில், அது எவ்வகையில் ஏற்படுகின்றது;

(iii) சீனி, யூரியா, அமோனியா, கையடக்கத் தொலைபேசி பட்டரி, முள்ளுக் கம்பி போன்ற பிற பொருட்களைப் பயன்படுத்துவதன் மூலம் அல்லது கலப்பதன் மூலம் மேற்கொள்ளப்படும் கள்ளு உற்பத்தியை குறைப்பதற்காக மதுவரித் திணைக்களம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(iv) கள்ளு தொடர்பில் தரநிர்ணய முறையொன்று காணப்படாமையினால் நீதிமன்ற நடவடிக்கைகள் மற்றும் அரச கடமைகளின்போது தரமற்ற கள்ளை அடையாளங்காணும் விதம் யாது;

என்பதையும் அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1419/2021

கௌரவ அநுர திசாநாயக்க,— பிரதம அமைச்சரும் நிதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இன்றளவில் அரசாங்கத்தினால் செலுத்தப்பட வேண்டியுள்ள மொத்த வெளி நாட்டுப் படுகடன் தொகையானது அமெரிக்க டொலர்களில் எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி கடனுக்காக செலுத்த வேண்டியுள்ள கடன் மற்றும் வட்டி தவணைத் தொகையானது ஒவ்வொரு வருட ரீதியில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி வெளிநாட்டுக் கடன் பெறப்பட்ட வருடம், பெறப்பட்ட மொத்தத் தொகை, மீள் செலுத்தப்பட்டுள்ள தொகை, செலுத்தப்பட வேண்டியுள்ள தொகை, கடனை முழுமையாக செலுத்தி முடிப்பதற்குள்ள வருடங்களின் எண்ணிக்கை என்பவை கடன் பெற்ற ஒவ்வொரு கருத்திட்டத்தின் அடிப்படையில் வெவ்வேறாக யாவையென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) அரச சார்பற்ற துறைகள் பெற்றுள்ள இன்றளவில் செலுத்த வேண்டியுள்ள மொத்த வெளிநாட்டுக் கடன் தொகையானது அமெரிக்க டொலர்களில் எவ்வளவு என்பதனை அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1433/2021

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சரும் நிதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கள்ளு கைத்தொழிலுக்காக வழங்கப்படும் உரிமப்பத்திர வகைகள் மற்றும் உரிமம் பெற்றவர்களின் பெயர்கள் என்பன யாவை என்பதையும்;

(ii) கள்ளு சேகரிப்பதற்காக உரிமம் பெற்றுள்ளவர்களின் பெயர்கள் என்ன என்பதையும்;

(iii) அவர்களுள் 2020.12.31 திகதியில் தொழிலில் ஈடுபடுகின்ற மற்றும் தொழிலில் ஈடுபடாத உரிமப் பத்திரம் கொண்டுள்ளவர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் என்பன வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வினாகிரி தயாரிப்பிற்கு உரிமம் பெற்றுள்ளவர்களின் பெயர்கள் என்ன என்பதையும்;

(ii) அவர்களுள் 2020.12.31 திகதியில் தொழிலில் ஈடுபடுகின்ற மற்றும் தொழிலில் ஈடுபடாத உரிமப் பத்திரம் கொண்டுள்ளவர்களில் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் என்பன வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) கள்ளு சேகரிப்பதற்கு அல்லது வினாகிரி தயாரிப்பதற்கு வழங்கப்படும் உரிமத்திற்கு அமைவாக —

(i) உடைமையில் வைத்திருக்கக் கூடிய கள்ளின் அளவை தீர்மானிக்கும் முறையியல் யாதென்பதையும்;

(ii) உடைமையில் வைத்திருக்கக் கூடிய கள்ளின் அளவு வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) உடைமையில் வைத்திருக்கக் கூடிய கள்ளின் அளவானது கள்ளு சீவுவதற்கு மரங்களுக்கு வழங்கப்படும் உரிமத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

## 2021 யூலை 06, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

90/2020

கௌரவ ஹேஷா விதானகே,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தின், எம்பிலிபிட்டிய பிரதேச செயலகப் பிரிவில் உலை எண்ணெய் சார்ந்த மின் உற்பத்தி நிலையமொன்று நிறுவப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி மின் உற்பத்தி நிலையத்தின் செயற்பாடு காரணமாக கடுமையான சுற்றாடல் சேதம் ஏற்படுகின்றதென்பதையும்;

(iii) மேற்படி மின் உற்பத்தி நிலையத்துக்கு சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வழங்கப்படும்போது உரிய முறையியல் பின்பற்றப்படவில்லை என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி மின் உற்பத்தி நிலையத்தின் உரிமையைக் கொண்டுள்ள நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனத்துடன் உடன்படிக்கை கைச்சாதிடப்பட்டுள்ள கால எல்லை யாதென்பதையும்;

(iii) மேற்படி மின் உற்பத்தி நிலையத்தின் மூலம் ஏற்படுகின்ற சுற்றாடல் சேதத்தினைக் குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2021 யூலை 22, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

67/2020

கௌரவ ஹேஷா விதானகே,— அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்திற்கமைய கழிவு முகாமைத்துவம் எனும் விடயம் மாகாண சபைகளின் கீழ் வருகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வாறாயின், மாகாண சபை முறை ஆரம்பிக்கப்பட்டது முதல் இது வரை திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்கென பிரத்தியேகமான நிறுவனங்களை அமைத்துள்ள மாகாண சபைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) அவ்வாறான விசேட நிறுவனம் அமைக்கப்படாத மாகாண சபைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) அவ்வாறான நிறுவனம் அமைக்கப்படாத மாகாண சபைகளுக்கென விசேட நிறுவனத்தை அமைப்பது தொடர்பில் அமைச்சு எடுக்கும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

199/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சரும் நிதி அமைச்சரும், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் காணப்படுகின்ற அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுக்களின் மற்றும் இராஜாங்க அமைச்சுக்களின் எண்ணிக்கை;

(ii) அவற்றின் பெயர்கள்;

தனித்தனியே யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவற்றில் தனியார் கட்டிடங்களில் அமைச்சுக்களை பேணிவரப்படுகின்ற அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுக்களின் மற்றும் இராஜாங்க அமைச்சுக்களின் எண்ணிக்கை;

(ii) அவற்றின் பெயர்கள்;

(iii) அவற்றுக்காக செலுத்தப்படுகின்ற மாதாந்த வாடகைத் தொகை;

தனித்தனியே யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) தனியார் கட்டிடங்களில் பேணிவரப்படுகின்ற அமைச்சுக்களை அரசாங்க கட்டிடங்களுக்குக் கொண்டு செல்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

242/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகன உதிரிப் பாகங்களின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை யாதென்பதையும்;

(iii) மேற்படி மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள் எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iv) மேற்படி மோட்டார் வாகன உதிரிப் பாகங்களை இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு மோட்டார் வாகன உதிரிப் பாகங்களை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும் அவர் தனித்தனியாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

355/2020

கௌரவ புத்திக பத்திரண, — நீர்வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குடிநீர் வழங்கப்படுகின்ற அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள வாவிகளின் நீரின் தரம் வீழ்ச்சியடைந்துள்ளது என்பதையும்;

(ii) E-coli உள்ளிட்ட பல்வேறு கிருமிகள் கலந்துள்ளதால் இந்நீர் மக்களின் சுகாதாரத்திற்குப் பாதகமானது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) குடிநீரைப் பெற்றுக்கொள்வதற்காக பயன்படுத்தப்படுகின்ற அநுராதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள வாவிகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி வாவிகளிலுள்ள நீரின் தரத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

519/2020

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வாழைச்சேனையில் அமைந்துள்ள கடற்றொழில் துறைமுகத்தில் சாதாரண இழுவைப் படகுகளை கையாளுவதற்கான வசதிகள் உள்ள போதும் அதன் நுழைவாயில் மற்றும் ஆழம் போதுமானதாக இல்லாததால் மிகப் பெரிய இழுவைப் படகுகளை கையாளுதல் பிரச்சினையான விடயமொன்றாகி உள்ளதோடு, இதன் காரணமாக உள்நாட்டு கடற்றொழிலாளர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளார்கள் என்பதையும்;

(ii) மேற்படி கடற்றொழில் துறைமுகத்தை விரிவாக்குவதன் தேவையொன்று உள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி கடற்றொழில் துறைமுகத்தை விரிவாக்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

543/2020

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2015 ஆண்டு தொடக்கம் 2018 வரையான காலப்பகுதியில் இலங்கையின் தேசிய பாடசாலைகளுக்கான கல்விசாரா பதவியணிகளுக்கு ஊழியர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டார்கள் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி ஒவ்வொரு தேசிய பாடசாலைக்கும் இவ்வாறு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பதவிப் பெயர்கள் தனித்தனியே யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு தேசிய பாடசாலைக்கும் இவ்வாறு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை தனித்தனியே எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

671/2020

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அண்மையில் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட பிங்கிரிய கிணியம நிர்ப்பாசனத் திட்டத்தின் உத்தேசிக்கப்பட்ட எதிர்கால பணிகளுக்குச் செலவாகும் நிதி எவ்வாறு திரட்டப்படும் என்பதையும்;

(ii) மேற்படி உத்தேசிக்கப்பட்ட பணிகளுக்குச் செலவாகும் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி உத்தேசிக்கப்பட்ட பணிகளுக்காக எவ்வளவு காலம் செல்லும் என்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்தின் மூலமாக நீரைப் பெறும் குளங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

757/2020

கௌரவ அமரகீர்த்தி அத்துகோரள,— வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) பொலன்னறுவை மாவட்டத்தில் —

(i) காட்டு யானைகளின் நடமாட்டம் தொடர்பாக ஆய்வு நடத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) காட்டு யானைகள் அதிகளவில் நடமாடும் தேசிய வனப் பூங்காக்கள் மற்றும் வன ஒதுக்கங்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) யானை கொரிடோக்கள் இருப்பின், அவை அமைந்துள்ள இடங்கள் யாவை என்பதையும்;

(iv) யானை கொரிடோக்களுக்கு குறுக்கே கிராமங்கள் அல்லது மக்கள் குடியிருப்புப் பகுதிகள் இருப்பின், அவை யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு செப்டெம்பர் வரை மாவட்டத்தில் யானை - மனித மோதல் காரணமாக —

(i) உயிரிழந்த ஆட்கள் மற்றும் யானைகளின் எண்ணிக்கை பிரதேச செயலகப் பிரிவு வாரியாக எவ்வளவென்பதையும்;

(ii) சேதமடைந்துள்ள வீடுகளின் எண்ணிக்கையானது வருட வாரியாக எவ்வளவென்பதையும்;

(iii) உயிரிழந்த மற்றும் சொத்துக்களை இழந்தவர்களுக்கு செலுத்தப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகை ஒவ்வொரு நபர் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மாவட்டத்தில் யானை-மனித மோதலை கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப் பட்டுள்ள புதிய நடவடிக்கைகள் யாவை என்பதை மேலும் அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

803/2020

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிளிநொச்சி மாவட்டத்தின் கரச்சி பிரதேச செயலாளர் பிரிவில் கிளி/வட்டக்கச்சி மத்திய மகா வித்தியாலயம் என்ற பெயரில் ஒரு பாடசாலை உள்ளதென்பதையும்;

(ii) மேற்படி பாடசாலையின் பொருட்டு புதிய கேட்போர் கூடமொன்றை நிர்மாணிப்பதற்காக 2017ஆம் ஆண்டில் அடிக்கல் நாட்டப்பட்டது என்பதையும்;

(iii) ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் விடுவிக்கப்படாமை காரணமாக கேட்போர் கூடத்தை நிர்மாணிக்கும் பணிகள் இன்றளவில் நிறுத்தப்பட்டுள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கேட்போர் கூடத்தை நிர்மாணிப்பதற்காக நிதி ஏற்பாடுகளை ஒதுக்கிய அமைச்சு யாது என்பதையும்;

(ii) மேற்படி நிதி ஏற்பாடுகள் விடுவிக்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி கேட்போர் கூடத்தை முழுமையாக நிர்மாணிப்பதற்குத் தேவையான தொகை எவ்வளவு;

(ii) அதற்கென நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்படும் திகதி யாது;

(iii) மேற்படி நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு மாணவர்களின் பயன்பாட்டுக்காக அதனை வழங்க எடுக்கும் காலம் யாது;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

871/2020

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான டிப்போக்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு டிப்போவிலும் தற்போது போக்குவரத்தில் ஈடுபடுத்தக்கூடிய நிலையிலுள்ள பேரூந்துகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு டிப்போவிலும் தற்போது நிலவும் ஊழியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் அறிவிப்பாரா?

(ஆ) திருகோணமலை மாவட்டத்திலுள்ள டிப்போக்களின் மனித வளம் மற்றும் அந்த டிப்போக்களில் காணப்படும் பேரூந்துத் தொகுதிகள் என்பவற்றை அபிவிருத்தி செய்வதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?